RECEIVED 1989-6-26 Periodicals Division

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 ஆனி 10 துல்ஹஸ்தா 19 இதழ் 36
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24-06-1989

## கொழும்பு-யாழ்'ரயில்சேவை நடைபெறவில்லை எரிபொருள், மா வந்துசேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். - கொழும்பு ரயில் சேவை நேற்று நடைபெறவில்லை.

கொழும்பு புகையிரத நிலையத்தில் ஊழியர்களின் வரவு குறைவாகக் காணப்பட்டதினால் இந்த ரயில் சேவை நடைபெறவில்லை என்று தெரியவருகிறது.

இதற்கிடையே யாழ்ப்பா

[8ம் பக்கம் பார்க்க]

## 'ஈரோஸ்' உறுப்பினர் மூவர் கடத்தப்பட்டனர்!

[யாழ்ப்பாணம்]

'ஈரோஸ்' உறுப்பினர்கள் மூவர் நேற்று தெல்லிப்பழையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்திச் செல்லப்பட்ட இந்த மூன்று பேரையும் பற்றிய தகவல்களை அறிய

(8-ம் பக்கம் பார்க்க)

# அமைதிப்படை வெளியேற வேண்டும்! தவறும் பட்சத்தில்

# முகாமுக்குள் முடங்கவேண்டும்

## கம்உதாவவிழாவில் 'பிரேமா'

(கொழும்பு)

**"இந்திய அமைதிப்படை அடுத்த மாதம் 29ம் திகதிக்கு முன்னர் வாபஸ் பெறப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் அமைதிப் படை தத்தமது முகாம்களுக்குள்ளாவது முடக்கப்பட வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணமக்களின் பிரச்னைகளுக்கு பேச்சு வார்த்தை மூலமே தீர்வு காணமுடியும்" என்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.**

மஹியங்கனையில் நேற்று நடைபெற்ற 'கம்உதாவ' திட்டத்தின் 11வது ஆண்டு விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

"இலங்கையின் விருப்பத்திற்கு மாறாக இந்தியா தனது படைகளை இலங்கையில் வைத்திருப்பதன் மூலம் உலக நாடுகளின் கண்டனத்துக்குள்ளாகாமல் தனது படைகளைத் திருப்பி அழைக்கவேண்டும் என்றும் திரு. பிரேமதாசா கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இந்திய-இலங்கை நல்லுறவுகளை மேலும் விருத்திசெய்வதற்கு உதவியாகவும் இந்தியா தனது படைகளை வாபஸ் பெறவேண்டும்.

"எமது பிரச்னைகளை நாம்

(8-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் விவகாரம்: ராஜீவுடன் ஒத்துழைக்க கருணாநிதியிடம் வேண்டுகோள்!

(சென்னை)

இலங்கைத் தமிழர் விவகாரத்தை இரண்டு அரசியற் கட்சிகளுக்கிடையிலுள்ள பிரச்னையாகக் கருதாமல் தேசிய அணுகுமுறையுடன் இதற்குத் தீர்வு காண்பதற்கு பிரதமர்

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழர் தேசிய சபை: பத்மநாபா அறிவிப்பு

(திருகோணமலை)

தமிழ் மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காக தமிழர் தேசிய சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயலாளர் நாயம் திரு. கே.

(7-ம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்ட பேரணிகள் ஊர்வலங்களுக்கு தடை!

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தின் கீழ் நாட்டில் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்தும் விதத்தில் செயற்பட பாதுகாப்பு படைகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கிடைத்த தகவல்களையடுத்தே மேற்படி தடை உத்தரவு பிறப்பிக்கப்

(7-ம் பக்கம் பார்க்க)

## புளியங்கூடல் மகாமாரி தேர்

(யாழ்ப்பாணம்)

புளியங்கூடல் செருத்தனைப்பதி மகாமாரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று காலை நடைபெறுகிறது.

(சிறப்பு மலர் உள்ளே)

## தியேட்டர் முகாமையாளர் சுட்டுகொலை

(யாழ்ப்பாணம்)

யாழ். வின்ஸர் தியேட்டரின் போது முகாமையாளர் திரு. சிறில் சுவாம்பிள்ளை (57 வயது) யாழ். மனோகரா தியேட்டர் சந்திக்கருகாமையில் இறந்து கிடக்கக்காணப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இவர் நேற்று முன்தினம் இரவு சுடப்

(8ம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச்சட்ட அமுலின் பின்னர் தெற்கில் 20பேர் கொலை! 60 சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

நாட்டில் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், தென்பகுதியில் சுமார் 20 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். பாதுகாப்புப் படையினரால் 60க்கும் மேற்பட்ட தீவிரவாத சந்தேக

(7-ம் பக்கம் பார்க்க)

## இந்தியபாதுகாப்புதளங்களுக்குமேலாகபறந்த அமெரிக்க விமானங்களை இந்தியா பறிமுதல்!

(புதுடில்லி)

இந்தியாவின் பிரதான பாதுகாப்புத் தளங்களுக்கு மேலாக அத்துமீறிப் பறந்த இரண்டு அமெரிக்க விமானங்களை இந்திய அரசு பறிமுதல் செய்திருக்கிறது!

இந்த விமானங்களின் நான்கு விமானிகளும் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் மேற்குப் பகுதியின் ஹட்ஜ் நகரிலுள்ள பாதுகாப்புத் தளங்களின் மேலாக இந்த அமெரிக்க விமானங்கள் பறந்துகொண்டிருந்ததை விமானப் படையின் 'ரடார்' கண்டுபிடித்ததைத் தொடர்ந்து, இரண்டு இந்திய போர் விமானங்கள் துரத்திச்சென்று தரையிறக்கச் செய்தது.

இந்த அமெரிக்க விமானங்கள் இந்தியப் பாதுகாப்புத் தளங்களின் மேலே பறந்ததற்கான காரணத்தைக் கண்டறியுமாறு புலனாய்வுத்துறை பணிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விமானத்துடன் கைது செய்யப்பட்டுள்ள 4 விமானிகளில் இருவர் அமெரிக்கர்கள் என்றும், இருவர் மேற்கு ஜெர்மனியர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

நல்ல இன 1½ மாத அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 15/2, ஒடைலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (சி 2998)

Broiler எல்லாவகையான இறைச்சிக் கோழிகளும் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். [சி-2797]

கருவாடு, ஆட்டுத்தோல், மற்றும் மாட்டுத்தோலுக்கு உகந்த அரைத்த உப்புத்தூள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M. G. M. & Stores, 777, K. K. S. Rd, Jaffna. சி-2925

## தேவை

தொழிற்சாலை அமைக்கக்கூடிய ஆகக்குறைந்தது 1000 சதுர அடி பரப்பளவுள்ள கட்டிடம் தேவை. அ. ஜெருட், டாக்டர் சுப்பிர்மணியம் வீதி, சுன்னுகம். [சி. 2999]

## கல்வி

S. K. ஜீவமோகனின் O/L கணித வகுப்புக்கள் அதிசித்தி பெற தொடர்புகொள்க: ஸ்ரார் பியூப்பில் அக்கடமி, கல்வியங்காடு. [தனிப்பட்ட முறையிலும் கல்வி பெறலாம்] [சி-2794]

## தவறிவிட்டது

பேக்கறி சுல்தானின் மகன் M. S. M முனஸ் என்பவருக்குச் சொந்தமான பணப் பார்சல் ரூபா 2260/- சோனக தெரு மர்க்கஸ்க்கும் நாவாந்துறை சேர்ச்சுக்கும் இடைப்பட்ட பகுதியில் 22-6-89 இரவு 7 மணியளவில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து M. S. M. முனஸ் இல. 151, (M.C. Road) சோனகதெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-3001)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து குப்பை கூளங்களை அகற்றுவதற்கு உழவு இயந்திரம் (சாரதி, ஏற்றி யிறக்குதல் உட்பட) வாடகைக்குத் தேவைப்படுகிறது.

விருப்பமானோர் பல்கலைக்கழக வேலைப் பொறியியலாளருடன் 28-6-1989, 10.00 மணிக்கு முன் தொடர்புகொள்ளவும்.

சகல கேள்விதாரரும் மீளளிக்கக்கூடிய பணமாக ரூபா 500/- செலுத்தவேண்டும். தெரிவு செய்யப்படும் உழவு இயந்திர உரிமையாளருக்கு இப்பணம் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட பின்பே மீளளிக்கப்படும்.

பதில் பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(ஏ 303)

### பண்டத்தரிப்பு பகுதியில்
# மின்கட்டண நிலுவையாக பதின்மூன்றரை லட்சம் ரூபா

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப்பகுதியில் மின்சார பாவனையாளர்களினல் செலுத்தப்படவேண்டிய மின்கட்டண நிலுவைத் தொகை 13 இலட்சத்து 58 ஆயிரமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியைச் சேர்ந்த மின்பாவனையாளர்களில் சிலர் கடந்த இரண்டு,மூன்று வருடகாலமாக தங்களது மின்கட்டணத்தை செலுத்தாமலிருக்கின்ருர்கள் என்றும் கூறப்படுகிறது. இதுவரை நங்கள் மின்சாரக் கட்டணத்தை செலுத்தாமல் இருப்பவர்களுக்கு சிவப்பு நிறத்திலான இறுதி அறிவித்தல் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இம்மாத இறுதிக்குள் இவர்கள் தங்கள் மின்கட்டண நிலுவையை அலுவலகத்திற்கு செலுத்தாத பட்சத்தில் இவர்களது மின்னிணைப்பு துண்டிக்கப்படும் என்று வலி. தென் மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்புப் பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. ந. குமாரசாமி தெரிவித்தார்.

இதனைத் தவிர சட்ட விரோத மின்பாவனையால் அலுவலகத்திற்கு பலத்த நஷ்டம் ஏற்பட்டுவருவதாகவும், இதனுல் மேலதிகமாக அதிகரித்துள்ள மின் கட்டணத்தை அலுவலகமே இலங்கை மின்சாரசபைக்கு செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இந்தவகையில் சுமார் 21லட்சம் ரூபா வரை மொத்தமாக இலங்கை மின்சாரசபைக்கு செலுத்த வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆசனங்கள் பதிவு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருகின்ற ரயில் பயணிகள் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் மூன்ரும் வகுப்புக்குரிய 'உறங்கல் இருக்கை' ஆசனங்களைப் பதிவு செய்துகொள்ளலாம் என்று யாழ். ரயில் நிலைய அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கொழும்பு ரயில் பிரயாணங்களை அடிக்கடி மேற்கொள்ளவோரின் நன்மை கருதியே இந்த ஏற்பாடு ! செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## 'எனது இராகங்கள்' அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

வவுனியா திலீபனின் 'எனது இராகங்கள்' என்னும் புதுக் கவிதை நூலின் அறிமுகவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் கலை இலக்கிய கலாசார கழகத்தின் சார்பில் நடைபெறும் இவ்விழாவிற்கு அதன் தலைவர் திரு. த. தர்மகுலசிங்கம் தலைமைவகிப்பார்.

பல விரிவுரையாளர்களும், எழுத்தாளர்களும், கவிஞர்களும் இவ்விழாவில் உரையாற்றவிருக்கிருர்கள்.

## இடமாற்றம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரி லிகிதர் திருமதி எஸ். ருக்மணி வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


## பெண் விற்பனையாளர் தேவை

யாழ். நகரில் உள்ள ஆஸ்பத்திரி வீதியில் அமைந்திருக்கும் மருந்து விற்பனை நிலையத்திற்கு 4 வருட அனுபவமுள்ள பெண் விற்பனையாளர்கள் (Sales Girls) உடன் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. C 3000
மே/பா ஈழநாடு,
யாழ்ப்பாணம். (சி-3000]

## வறுத்த கைக்குத்து அரிசி மா

தரமான வறுத்த கைக்குத்து அரிசிமா பல்வேறு அளவுகளில் பனை அபிவிருத்திச் சபையினல் 'கற்பகம்' விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. மொத்தமாகப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் பின்வரும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

சந்தைப்படுத்தும் பகுதி
(பனை அபிவிருத்திச் சபை)
இல. 53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (எ-304)

## Chinese Restaurant on Rent

யாழ். மாநகர எல்லைக்குள்ளும், ரயில்வே ஸ்டேசனிற்கருகாமையிலும், சகல வித வசதிகளோடு அமைந்துள்ள

"சைனீஸ் றெஸ்டோரன்ற்"

ஒன்று ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்புகொள்ளவும்:

S.RAJATHURAI & CO.,
ACCOUNTING & TAX CONSULTANTS
KASTHURIAR ROAD,
(KANNATHIDDY JUNCTION)
JAFFNA. (சி-3003)
TIME: WEEK DAYS 9 a.m.— 12-00


### வறிய குடும்ப இளைஞர்களுக்கு
# சிறு முயற்சிகளை ஆரம்பிக்க கடன் வழங்கும் திட்டம்

(சுன்னுகம்)

வடக்குக்கிழக்குப் பகுதிகளிலுள்ள குறைந்த வருமானமுள்ள குடும்பங்களைச்சேர்ந்த 18 முதல் 35 வரை வயதுள்ள இளைஞர்களுக்குச் சிறுமுயற்சிகளை ஆரம்பித்து வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் முகமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் கடன் வழங்கும் அவசரகால புனர் வாழ்வு, புனரமைப்புச் செயற்திட்டம் ஏற்படுத்தப்படவிருக்கின்றது.

இத்திட்டத்தின் மூலம் தனிநபர் ஒருவர் 5000 ரூபாவரை ஐந்தாண்டுகளில் திருப்பிச் செலுத்தும் ஒப்பந்த அடிப்படையில் கடனைப் பெற்றுக் கொள்ளமுடியும். சிக்கன நாணய கூட்டுறவுச்சங்கங்கள், கூட்டுறவுச்சங்கங்கள் ஆகிய அரசசார்பற்ற நிறுவனங்கள் நிதியமைச்சிலிருந்து வட்டியில்லாத நிதியைப்பெற்று நான்கு சத வீத வட்டியுடன் கடன்கொடுக்க முடியும்.

இத்திட்டத்தில் பங்குபற்ற விரும்பும் அரசசார்பற்ற நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட அரச அதிபர்களுக்கு ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளன. கடன் வழங்கப்படவிருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் கடந்த காலச் செயற்பாட்டை அவதானித்தே அதற்கமைய இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## நெல்லியடியில் கடையடைப்பு தொடர்கிறது

(வடமராட்சி)

நெல்லியடியில் கடைகள் தொடர்ந்து பூட்டப்பட்டிருக்கின்றன.

கடந்த 13ம் திகதி நெல்லியடியில் இரு வர்த்தகர்கள் துப்பாக்கியாளர்களால்சுட்டுக் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்தே வர்த்தக நிலையங்கள் தொடர்ச்சியாகப் பூட்டப்பட்டுள்ளன.

காய்கறி, மீன் சந்தைகள் நெல்லியடியின் அயற்கிராமங்களின் வீதிகளில் நடைபெற்று வருகின்றன.

## இராசி பலன்

**24-06-1989**

பஞ்சமி காலை 7-32வரை, சதயம் பின் இரவு2-46வரை அமிர்தயோகம், இராகு காலம் 8-55 முதல் 10-29 வரை சுபகருமங்கட்கு நன்று.

மேஷம்: புதிய ஸ்தானம், குடும்பத்தில் மகிழ்ச்சி, வெளியூர் பயணம், தொழில்துறை பாராட்டு, நன்மை.

இடபம்: குடும்பச் சிறப்பு, தொழில்லாபம், பூமிலாபம், அதிகாரம், பணப்புளக்கம்.

மிதுனம், குடும்பத்தில் பூசல். நண்பர் விரோதம், மனதில்வேதனை, மாதர்நட்பு, வீண் பயம்.

கடகம்: இராஜபயம், வயிற்றில் ரோகம், மனைக்கஷ்டம், தொழில் பிணக்கு, கோபம்.

சிங்கம்: வழிக்கு வருதல், புதிய முதலீடு, குடும்ப உல்லாசம், சகோதரர் உதவி.

கன்னி: புதிய ஸ்தானம், வாக்கு வசீகரம், மனநிறைவு, ஆலயதரிசனம், கடமைதவறுதல்.

துலாம்: காரியநஷ்டம், பணச்செலவு, வீண்பகை, குடும்பப்பிணக்கு, கவலை.

விருச்சிகம்: நோய் அதிகரிக்கும், வீட்டுக்கஷ்டம், சகோதர பகை, தொழில் கஷ்டம்.

தனுசு; மக்களால்பெருமை, அதிகாரிகள் பாராட்டு, குடும்பத்தில் சுபகாரியம், பணவரவு, மகிழ்ச்சி.

மகரம்: எண்ணத்தில் சலனம், குடும்பப்பிரிவு, வீட்டில் துன்பம். நம்பிக்கைத் துரோகம், மனச்சுமை.

கும்பம்: எதிர்பாராத வெற்றி, குரு தரிசனம், பயணங்களால் நன்மை.

மீனம்: குழம்பிய நிலை, குடும்பகலகம், அதிகாரிகள் தொல்லை, வாக்குமேன்மை, ஆலயதரிசனம்.

## நிதிதிரட்ட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வுக்கழக ஆதரவில் இயங்கும் உரும்பிராயில் உள்ள 'ஞானசம்பந்தர் சிறுவர் இல்லத்தின்'' செலவுகளைப் பூர்த்தி செய்வதற்காக பாடசாலைகள் தோறும் உண்டியல் வைத்து நிதி திரட்டப்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

## புதிய நூல்நிலையம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயண சனசமூகநிலையத்தின் புதிய நூல் நிலையம் தொழிலதிபர் திரு. க. கனகராசாவினுல் திறந்துவைக்கப்பட்டது.

நிலையத்தலைவர் திரு. செ. பேரின்பநாதனின் தலைமையில் இடம்பெற்ற இத்திறப்பு விழாவில் சர்வோதய உறுப்பினர் திரு. இ. நடராசா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். அன்றையதினம் மரம்நாட்டுவிழாவும் இடம் பெற்றது.

## நாடகப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி வளர்மதி சனசமூக நிலையம் வடமாகாண ரீதியில் நாடகப் போட்டியொன்றினை நடத்தவுள்ளது.

தமிழ் நாடகத் துறையை வளர்க்கும் நோக்குடனும் நடிகர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும் நடத்தப்படவுள்ள இப்போட்டிக்கு குடாநாட்டின பல பாகங்களிலிருந்தும் பலமன்றங்கள் விண்ணப்பித்துள்ளன.

இப்போட்டியில் கலந்து கொள்ளவிருமபும் கழகங்கள், நாடகமன்றங்கள் நிலையச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## சிங்களமொழியில் விஞக்கொத்து

(சுன்னுகம்)

25,000 ஆசிரியர்களை நியமித்தல் தொடர்பாக கல்வி அமைச்சிலிருந்து பாடசாலை சம்பந்தமான மாணவர்கள் ஆசிரியர் விபரங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு விஞக்கொத்து ஒன்று சகல பாடசாலைகளுக்கும்அனுப்பப்பட்டது.

யாழ். மாவட்டத்தின் சில பாடசாலைகளுக்கு அந்த விஞக்கொத்து சிங்கள மொழியில் அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள மொழியில் அனுப்பப்பட்ட விஞக்கொத்தைப் பூரணப்படுத்த சிங்களமொழி தெரிந்தவர்களை நாடிச்செல்ல வேண்டியிருந்ததாக அதிபர்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்.

— திருக்குறள்

# நமது நோக்கு

## பாலுக்கு யார் காவல்?

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மத்திய அரசே பாதுகாத்து வரும் என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகச் செய்தி வந்துள்ளது. இது ஏற்கனவே எடுத்த முடிவுக்கு முரண்பட்டதாகும்.

இலங்கை முழுவதிலும் புராதன சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக 454 இடங்களை அரசு தெரிவு செய்துள்ளது. இதிலே வடகிழக்கு மாகாணத்தில் 49 இடங்கள் அடங்குகின்றன.

நல்லூர் சங்கிலியன் தோப்பு, யாழ். மேல்நீதிமன்றக் கட்டிடம், அச்சுவேலி போர்த்துக்கேயர் ஆலயம், ஒல்லாந்தர் கோட்டைகள் போன்ற பதினாறு இடங்கள் யாழ். மாவட்டத்திலே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவை புதை பொருள் ஆராய்ச்சிக்குரிய இடங்கள். இவை பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் இரு கருத்தில்லை. ஆனால் இவற்றைப்பாதுகாத்து நிர்வகிக்கும் பொறுப்பு யாரிடம் இருக்கவேண்டும்?

பல இன மக்கள் வாழும் நாட்டிலே, அந்தந்த இன மக்களின் பாரம்பரிய பண்பாடுகள், வரலாற்றுச் சான்றுகள் பாகுபாடின்றி, விருப்பு வெறுப்பின்றிப் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும். பெரும்பான்மை இனம் ஒரே மொழி, ஒரே கலாசாரம் என்று எண்ணத்தொடங்கலாமா? ஆள நினைக்கலாமா? விளைவு என்ன?

உதாரணத்திற்கு, இன்று பல்கேரியாவில் நடந்ததென்ன? அந்த நாட்டின் சிறுபான்மை இனமான பதினைந்து இலட்சம் துருக்கிய மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. சென்ற நாலரை வருடங்களாக, 'ஒருமைப்படுத்தி ஏற்றல்' -அதாவது 'அசிமிலேசன்' என்ற கொள்கைக்கு வலுவூட்டப்பட்டது. இதனால் இன எழுச்சி தோன்ற, ஆர்ப்பாட்டங்கள் அதிகரிக்க, அடக்குமுறைகள் ஏவிவிடப்பட, துருக்கியர் அகதிகளாகி, அயல் நாடான துருக்கிக்குச்செல்ல நேர்ந்துவிட்டது. இன்று சர்வதேசப் பிரச்னையாகிவிட்டது; மனித உரிமைகள் கழகத்தில் விவாதிக்கப்படுகிறது.

எனவே, பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டுவிடும்' என்ற நோக்கில் அரசு நடவடிக்கை எடுக்கும் காலம் மலையேறிவிட்டது.

அரசியற் சட்டத்திற்குப் பதின்மூன்றுவது (நல்ல எண் !) இலக்கத் திருத்தச் சட்டம் வந்தது. அதன் ஒன்பதாவது பகுதியின் முதலாவது பட்டியலில் மாகாணங்களுக்குரிய விஷயங்கள் தொகுக்கப்படன. வரலாற்று முக்கியத்துவ இடங்களைப் பாதுகாத்தல் என்ற விடயமும் அந்தப் பட்டியலில்தான் சேர்க்கப்படுமெனத் தீர்மானம் இருந்தது. ஆனால், தென் இலங்கையில் எழுந்த எதிர்ப்பைக் காரணங்காட்டி, மத்திய அரசுக்குரிய இரண்டாவது பட்டியலுக்கு மாற்றத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த நாற்பது வருடங்களாகச் சிறுபான்மையோர் உரிமைகளைக் கொடுக்க முயன்றபோதெல்லாம், அங்கு தோன்றும், தோற்றுவிக்கப்படும் எதிர்ப்புக்களைக் காட்டினார்கள்; கைவிட்டார்கள். இந்த நாடு பெரும்பான்மை மக்களுக்கே உரியது என்று காட்ட எடுத்த முயற்சிகளை நாம் மறந்துவிட முடியுமா?

பாடநூல்கள் வெளியிடும் தனியுரிமை அரசின் கைக்கு வந்தது. அதனால் இலங்கையின்எல்லாப்பகுதி மாணுக்கரும் அரசு வெளியிடும் நூல்களையே படிக்க வேண்டிய கடப்பாடு வந்தது. சமூகவியற் பாடநூலை எழுதியவர்கள் யார்? எவ்வாறு எழுதப்பட்டது? சிறுபான்மை இன மக்கள் வரலாறு, திரிக்கப்படாது, மறைக்கப்படாது எழுதப்பட்டதா?

எனவேதான், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்கும், நிர்வகிக்கும் விஷயம் எவ்வாறு மத்திய அரசிடம் விடலாம்? பாலுக்குக் காவலாகப் பசித்தவனைக்கூட வைத்திடலாம்; ஆனால் உருசிகண்ட பூனையைக் காவலுக்கு வைக்கலாமா?

## இந்தியப் படைக்குப் பதில் வெளிநாட்டுப்படை!

### சபையில் 'தினேஷ்' கருத்து

(கொழும்பு)

இந்திய அமைதிப்படையினர் உடனடியாக இலங்கையிலிருந்து வாபஸ் பெறப்பட வேண்டும் என்பதில் தேசிய ரீதியிலான அபிப்பிராயம் உருவாகியுள்ளது என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''எமதுஉள்நாட்டுப்பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதற்கு நாம் எந்தவகையிலாவது நடவடிக்கை எடுக்கவேண்டும். இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலுள்ள சகல எதிர்க்கட்சிகளினதும் ஒரே கோரிக்கை இந்திய அமைதிப் படையை இந்தியா திருப்பி அழைக்கவேண்டும் என்பதாகும்.

''எமதுநாட்டிலுள்ள வெளிநாட்டுப்படையை வெளியேற்ற இன்னுமொரு வெளிநாட்டுப் படையை கொண்டு வரவேண்டியது அவசியமல்ல என்பதை நாம் உணரவேண்டும்.''

யாழ். மாநகர ப. நோ. கூ. சங்கத்தால்

# 30 லட்சம் ரூபா கடன் திருப்பி செலுத்த முடியாத நிலை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர பல நோக்கு கூட்டுறவுச்சங்கம், தனியார் வர்த்தக நிலயங்களில் முப்பது லட்சம் ரூபாவுக்கு வாங்கிய பொருள்களுக்குரிய கடன் திருப்பிச்செலுத்த முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாநகர பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் உணவு முத்திரை உள்ளவர்களுக்கும் உணவுப் பொருட்களைகொடுப்பதற்காகவே தனியார் கடைகளில் மேற்படி தொகைக்கு கடன் பெற்றுள்ளதாம்.

தம்மிடம் 25 லட்சம் ரூபா பெறுமதியான உணவு முத்திரைகள் இருக்கின்றது எனவும், ஆயினும் இவற்றை உடனடியாகப் பணமாகப் பெற முடியவில்லை என்றும் இதற்கான காரணம் யாழ். சமூகசேவைப் பகுதி செயல்படாததே என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மற்றும் உணவு முத்திரை புதிதாக அண்மையில் விநியோகிக்கப்பட்டதால் இரு தடவைகளுக்குரிய உணவு முத்திரை உணவுப்பொருட்களை விநியோகிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் இதனால் மேலும் இரட்டிப்பாகக் கடன் பெறவேண்டியுள்ளது.

சமூக சேவைப்பகுதியினர் செயல்பட்டு எமது உணவு முத்திரைகளுக்குரிய பணத்தைதர தாமதமாகினுல் எம்மால் எதுவும் செய்யமுடியாதநிலை ஏற்படலாம் என்று மேற்படி சங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர்தெரிவித்துள்ளார்.

# ஆசிரியர் கடமையும் மாணவர் ஒழுக்கமும்

நாடும் சமுதாயமும் தனக்காக வாழ்வதாகக் கற்றோர் கருதக்கூடாது. நாட்டுக்காகவும் சமுதாயத்துக்காகவும் தாம் வாழ்வதாகக் கருதவேண்டும். கற்றவர் ஒவ்வொருவரும் நாட்டுக்கும் சமுதத்தாயதுக்கும் கடமைப்பட்டவர்கள். பொறியியலாளர், பொருளியலாளர், விவசாயிகள், வியாபாரிகள், மருத்துவர்கள், நிர்வாகிகள். வழக்கறிஞர்கள் ஆகிய இவர்கள் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கு மட்டும் கல்வி கற்பதில்லை. பொறுப்புள்ள குடிமக்களாக வாழ்ந்து காணப்படும் பிரச்னைகளுக்கு முடிவு கண்டு நாடும் சமுதாயமும் முன்னேறுவதற்கு உழைக்க வேண்டும். இத்தகைய உயர்ந்த சீரிய மனப்பான்மையை மாணவர்களின் உள்ளங்களில் பசுமரத்தாணி போல் பதிய வைப்பதற்கு ஆசிரியர்கள் சொல்லாலும், செயலாலும் வழிகாட்ட வேண்டும். ஆசிரியர்கள் மாணவருக்கு நண்பர்கள், வழிகாட்டிகள், ஆலோசகர்கள், அத்தனைக்கும் மேலாக அவர்கள் பார்த்துப் பழகும் உதாரண புருஷர்கள்; களாகும். ஆசிரியர்களும் மாணவர்களின் ஒழுக்கவீனத்துக்குக் காரணம் என்பதை மறுக்க முடியாது. ஆகவே ஆசிரியர்கள் மாணவர்களின் நல்லொழுக்கத்துக்குப் பாடுபடவேண்டும்.

வளரும் பருவத்தினருக்குரிய இயல்பான துடிப்பு மாணவர்களிடம் இருக்குமாதலால் அவர்களை நன்முயற்சியில் வழிப்படுத்தல்வேண்டும். விளையாட்டுக்கள், ஓய்வு நேரப் பொழுதுபோக்கு, பாடக் கல்வித் துணை முயற்சிகள் ஆகியவற்றில் ஈடுபட முழு வசதி அளிக்கவேண்டும். மாணவர்களின் ஆற்றலை ஆராய்ந்து அறிந்த அவர்களின் சுயமுயற்சிக்கு முக்கியமான இடம் அளிக்கவேண்டும். அவர்களின் ஆற்றலை வழிச்செய்யும் வகையில் நல்ல துறையில் வழிப்படுத்தவேண்டியது ஆசிரியரது கடமையாகும். பயன்தரக் கூடிய கல்வியில் சுயமுயற்சி முக்கியமான இடத்தைப்பெறுகிறது. சுயமுயற்சியைத் தூண்டும் ஆற்றல் நல்ல சூழலுக்கு உண்டு என்று கற்றறிந்தோர் கருதுகின்றார்கள்.

தமிழர்கள் தமது கல்வி வளர்ச்சியில் ஒழுக்கத்திற்கு முக்கிய இடம் கொடுத்தனர்.

### பொ. சிவகுருநாதன்

(பி. எஸ்சி. கல்வி டிப்ளோமா, கல்வி அதிகாரி)

நேரம் தவருது கருமமாற்றுவதில் மாணவருக்கு முன்னேடிகள்.

ஆசிரியர்கள் பலர், பல அறிந்திருந்தும் செயலாற்றுவதில் பின்னடைந்திருக்கிறூர்கள் என்பதை ஒப்புக்கொள்வார்கள். ஆசிரியர்களுக்கு தொல்லைகள் அதிகம் இருந்தும் அவர்கள் தமக்கு இருக்கும் பொறுப்பினை மறந்துவிடக்கூடாது. இளைஞர்கள் வாழவேண்டும். வருங்காலம் அவர்களுடையது. அவர்களுக்கு வழிகாட்டி, கடமையுணர்வுள்ளவர்களாக ஆக்கும் பொறுப்பு ஆசிரியர்களுடையதாகும், மேலும் கல்வியின் வளர்ச்சி, கல்வி நிறுவனத்தின் தரம், மாணவர்களின் அறிவு இவையாவும் உயர்ந்த நிலையை அடைதல், ஆசிரியர் முயற்சியைப் பொறுத்ததே.

மாணவர்களிடையே ஒழுக்கயீனம் அதிகரித்து வருவதாக, நாட்டின் பல பாகங்களிலும் அச்சம் தோன்றியுள்ளது. ஒழுக்க வீனம் உண்டாவதற்கு பல காரணங்கள் உள. மாணவர்களிடையே தோன்றியுள்ள தோல்வி மனப்பான்மை, வேலையில்லாப் பிரச்னை, ஆசிரியர் ஆகியன முக்கிய காரணங்கள் ஆகியன முக்கிய காரணங்

ஒழுக்கம், என்பது மனதைப் பண்படுத்தி, மனதில் தோன்றும் விருப்புகளை நல்வழியில் செல்ல வைத்தல். ஆசிரியர்கள் மாணவர்மீது நூலறிவைப் போதிப்பதோடு இருக்காது, அவர்களின் மனதைப் பண்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்தவேண்டும். பண்பட்ட உள்ளம் ஒருவர், தான் பாடசாலையில் சேகரித்த அறிவைப் பயன்படுத்தும் ஆற்றல் அற்றவராகவே காணப்படுவார். உள்ளத்தைப் பண்படுத்துவதற்கு மனதை ஒருவழிப் படுத்தி தன்னடக்கம் உள்ளவராகப் பயிற்சி செய்தல்வேண்டும். தன்னடக்கம் உள்ளவராகப் பயிற்றப்பட்ட மாணவன் புத்திக்கூர்மையுள்ளவராகவும், பலவகைப்பட்ட திறமையுள்ளவராகவும் இருப்பார். மாணவர்கள் மற்றவர்கள் மீது அனுதாபம் கொள்ளவும், சுயநலத்தை நீக்கி குடும்பம், அயலவர், சமூகம், மனிதவர்க்கம் என்போரிடத்தில் அன்பு விரிவடையச் செய்யும் பயிற்சியே ஒழுக்கம். இத்தகைய ஒழுக்கம். ஒழுக்கத்தை உள்ளத்தில் உரப்படுத்த துணைபுரிவது இறையன்பு. இதைச் சமயக் கல்வி மூலம் ஊட்டுவது ஆசிரியர்களது கடமை.

நாளை சைவசித்தாந்த

## ஆய்வு வட்ட ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

சைவசித்தாந்த ஆய்வுவட்ட ஆரம்பவிழா, நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பிரதானவீதியிலுள்ள யாழ். திருமறைக் கலாமன்ற ஆய்வரங்கில் நடைபெறவுள்ளது.

தமிழர் நெறியாகிய சைவ சித்தாந்தத்தின் கொள்கைகளை உலகறியச் செய்யும் நோக்குடனும் ஆராய்ச்சி மூலம் அக்கருத்துக்களை வளர்க்கும் எண்ணத்துடனும் இந்த விழா நடைபெறவுள்ளது.

## வருடாந்த உற்சவம்

(மண்டைதீவு)

மண்டைதீவு முகப்பு வயல் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று 24ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது.

எதிர்வரும் 1ம் திகதி வேட்டைத்திருவிழாவும், 3ம் திகதி ரதோற்சவமும், 5ம் திகதி தீர்த்தோற்சவமும் அடுத்து திருக்கல்யாணஉற்சவத்துடன் திருவிழா நிறைவுபெறவுள்ளது.

# பலதும் பத்தும்

### அவருக்கா தலையிடி?

இலங்கையின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவர் மறைந்த டாக்டர் என்.எம். பெரேரா. ''சூரிய மல்'' அமைப்பில் இருந்து லங்கா சமஜமாசக் கட்சி வரை இடதுசாரி அரசியலைக் கட்டி எழுப்பியவர். இலங்கையின் தொழிற் சங்க வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். சகல இனத் தொழிலாள வர்க்கத்தின் ஏகோபித்த அபிமானத்தைப் பெற்றவர்.

அவருக்கென்ன? அவர் நிதியமைச்சராக இருந்த போது வங்கி ஊழியர்களின் வேலைநிறுத்தம் நடந்தது. அதைச் சமாளிக்கும் பொறுப்பு, பாவம், அவர் கையில்!

கடும் நடவடிக்கை எடுத்தார். பாதிக்கப்பட்ட வங்கி ஊழியர்கள் காத்திருந்தார்கள்: 'ஒரு சத நிதி' சேர்த்து தேர்தலில் அவர் தோற்க ஒரு காரணமாய் இருந்தனர்.

இன்று; தென் கிழக்காசியாவிலேயே பெரியதொழிற் சங்கமான இ. தொ. கா. வின் தலைவர்களில் ஒருவர் தான் அமைச்சர் எஸ். செல்லச்சாமி. அவருக்கென்ன? இன்றைய போக்கு வரத்து ராஜாங்க அமைச்சராக விளங்குகிறூர். போக்குவரத்து ஊழியர் வேலைநிறுத்தத்தைக் கையாளும் பொறுப்பு இவரிடம்!

-- வாணி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புளியங்கூடல் செருத்தனைப்பதி ஸ்ரீ
# தேர்த்திருவிழா

"ஆதி சிவனுடைய சக்தி- எங்கள் அன்னை அருள் பெறுதல் முத்தி" என வரகவி சுப்பிரமணிய பாரதியார்அன்னையைப்போற்றிப் பாடியுள்ளார். இவ்வகையில் நீலக் கடலலைகள் ஓங்கார ஒலிசெய்யும் தீவுப்பகுதியின் ஓரத்தில், அங்கும் இங்கும் திரண்டிருக்கும் கூடலூர் சோலைகளின் மத்தியில் இளந் தென்றல் அசைந்துவர இவை எல்லாவற்றுக்கும் சிகரமாய் கண்ணுக்கு விருந்தாகிக் கருத்துக்கு இன்பந்தந்து மன்னுயிரை உய்விக்கும் அம்பாள் கோவில் வானளாவும் கோபுரத்துடன் நிமிர்ந்து நிற்கின்றது. அமைதிமிகு சூழ்நிலையில் அமைந்திருக்கும் ஸ்ரீ மகாமாரி அம்பாளை ஒருமுறை கண் குளிர தரிசித்தவர் என்றும் மறவார்.

ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே இவ்வாலய வழிபாடு தொடங்கியதற்குச் சான்றுகள் உள. அந்நாளில் இவ்வூரில் சின்னத்தம்பி வைரமுத்து என்பவர் தேவி உபாசனையில் சிறந்து, அவளருளால் அறம்,பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு செல்வங்களையும் குறைவறப் பெற்று வாழ்ந்து வந்தார். இவர் வலிகாமம் மேற்குப் பகுதியில் கோயில்கொண்டிருக்கும் அம்பாள் ஆலயத்தில் ஆண்டுதோறும் அம்பாளுக்கு திருப்பூசை செய்து வருவதை வழக்கமாய்க்கொண்டிருந்தார். அவ்வாறு பூசைசெய்து கொண்டு வந்தவரை ஒரு முறை அவ்வூரவர்கள் திருப் பலிப்பூசையை செய்யவிடாது தடுத்தனர். இதனுல் மனம் நொந்து அவர் அம்பிகையின் திருவருளைத் துணையாகக் கொண்டு தம்பலியெடு ஆயுதத்தை கையில் ஏந்தியவராய் கடல் மார்க்கமாக கால்நடையில் தனது சொந்த ஊரான புளியங்கூடலை வந்தடைந்தார். அவ்விடத்தில் தனக்குச் சொந்தமான காணியில் வளர்ந்திருந்த திருக் கொன்றை மரவிருட்சத்தின்

த
தை அறியக்கூடியதாக உள்ளது.

அவருடைய காலத்தின்பின் திரு. கதிரேசுவும் அதைத் தொடர்ந்து அவர் மகனுகிய திரு. தம்புவும் கோயிலை நிர்வகித்து வந்தார்கள். தம்பு அடியார்களின் பேருதவியுடன் பஞ்சகிருத்திய நிருத்தம்என்று கூறப்படும் துவஜாரோகண விழாவை அவ்வாலயத்தில் நடத்தி பலிபூசையும் செய்து வந்தார். இவ்வாலயத்தில் ஆண்டுதோறும் வைகாசிமாத இறைவியின் திருவடியை நாடினுர். பின் வைரமுத்துவின் நாலாம் தலைமுறையினரான திரு. சுப்பிரமணியம் என்பவரிடம் ஆலய நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. அம்பாளின் திருவருளால்அவர்மக்களுடைய நோய், பிணி போன்ற பல துன்பங்களை நீக்கி பல அற்புதங்களைப் புரிந்தார். அவைகளில் பல இருப்பினும் ஒன்றையேனும் உலகிற்குக் காட்டவேண்டும் என்ற கருத்தினுல் ஓர் அற்புதத்தை இங்கு

கோபுரவேலை ஆரம்பிக்கப்
டது. அவ்வேலை பூர்த்தி
கும் தறுவாயில் அவர் இ
வியின் திருவடியடைந்த
இன்றும் பல இடங்க
பல்வேறு துன்பங்கள், நே
கள், ஊனங்கள் நிகழ்ந்து
கின்றபோது கூடலூரை
அதனைச் சார்ந்த கிராம
ளையும், மக்களையும்
வித இன்னலும் நேரா
ணம் காத்துவருவது அ
யின் அருளாட்சியே யா
அயல் கிராமங்களெல்

## ஸ்ரீமகாமாரி அம்பாளின் தல வரலா

கீழ் அவ்வாயுதத்தை வைத்து அதனையே அம்பாள் எனக் கொண்டு தியானித்து திருப் பலிப்பூசை செய்து அவளருள் பெற்றுவந்தார். ஒருநாள் அவர் கனவில் அப்பாள் தோன்றி இப்போது கோவில் அமைந்திருக்கும் இடத்தைக்



கூறி, அதில் ஆலயம்அமைத்து வழிபடுமாறுவேண்டிக்கொண்டதற்கு அமைய கற்கோயில் அமைத்து 1882ம் ஆண்டு அரசினுல் பதிவுசெய்யப்பட்ட கோவில்களின் இடாப்பில் இக்கோவிலையும் பதிந்து,பூசைகளை கிரமமாகச் செய்துவந்

இறுதியில் திருவிழா நடைபெறும். அந்நாளில் ஒருநாள் மூன்றும் திருவிழாவின்போது அம்பாளின் ஆலயம் அக்கினியினுல் சூழப்பட்டு அம்பாள் அக்கினி அபிஷேகம்பெற்றவளாயினுள். அன்றைய தினமே அடியார்களின் உதவியுடன் ஆலயம் புனரமைக்கப்பட்டதுடன், திருப்பலிப் பூசையும் நிறுத்தப்பட்டது.

மேற்குறித்த விபத்தினுல் திரு. தம்புமனஏக்கம்அடைந்து

குறிப்பிடுகின்றேன். ஒருநாள் பல மைல்தூரத்தில் இருக்கும் ஓர் அடியார் அம்பாளின் மகிமையை அறிந்து தனது குறையை நிறைவுசெய்யஇங்கு வந்தார். அவ்வேளையில் அம்பிகையின் அருட்கடாட்சகரான சுப்பிரமணியம் அருட்கலை கொண்டு அவரை அணுகி 'உனது மனைவிக்கு நெடுநாள் பூண்ட துன்பத்தைக் மாற்ற முடியாது வருந்துகிருய். இவ்வாலயத்திற்கு கொண்டுவா. அம்பாள்தீர்த்து வைப்பாள்' என்று கூறினுர். இதனைக் கேட்ட அவ்வடியார் உடன் மனைவியை அழைத்து வந்தார். அவள் உயிர் அகன்ற பிணம் போலக் காணப்பட்டாள். மக்கள் அனைவரும் அவள் இறந்துவிட்டதாக எண்ணிப் பயந்தனர். ஆனுல் சுப்பிரமணியமோ அம்பாள் சந்நிதானத்தில் நின்று மெய் யுருகி வழிபட்டுப் பின் பக்கத்தில் கிடந்த வேப்பம் பத்திரியை கரத்தில் எடுத்து மிக உக்கிரத்துடன் அவளுடைய தலையில் அடித்தார். அவள் உயிர்பெற்றெழுந்தாள். இதற்குவமையாக அம்மையின் ஞானப்பாலுண்ட ஞானசம்பந்தர் பாம்பினுல் கடியுண்டு, இறந்து எலும்பாகக் கிடந்த பூம்பாவையை மீண்டும்உயிர்ப்பித்த நிகழ்ச்சியை நினைவு கூரலாம். சுப்பிரமணியர் காலத்திலேயே இந்தியாவிலிருந்து ஸ்தபதிகள் வரவழைக்கப்பட்டு அம்பாளுக்குச் சித்திரத் தேர் அமைக்கப்பட்டது. அவருடைய அருட்கலையினுல் இந் நோய் நீக்கும் காட்சிகள் சித்திரத்தேரில் செதுக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம். அதற்குப் பின் அவர் மகன் துரையப்பா என்பவரால் கருங்கல்லினுல் ஆகிய இராஜ

மழையின்றி வாடும்பே
அன்னை மாரியாகி மக்க
வளங்களை அழியவி
பேணி வருகின்றள். இத்
யவளின் அற்புதங்களை
வோமாயின் அவை சொ
லடங்கா. இருநூறு ஆ
களுக்கு முன் இங்கு வை
பூசிக்கப்பட்ட திருப்பலி
ஆயுதம் இன்றும் அம்பா
மூலஸ்தானத்தில் வை
பூசிக்கப்பட்டு வருகின்
அவ்வாயுதம் இன்றும்
மழுங்காது, துயாது
வுடன் இருப்பது அன்னை
அருட்செயலேயாகும்.

இத்தன்மையாகிய
தங்களையெல்லாம் நிக
அம்பாளிடம் மக்கள் கொ
டுள்ள தீவிரபக்தியின் கா
மாக அவருடைய திருப்
கள் யாவும் நன்னேறி
கின்றன. நல்லை ஆதீன
வர் ஸ்ரீலஸ்ரீ சோமசு
பரமாசாரிய சுவாமிகள்
களின் ஆசியிலும்
புரைகளின் கீழும் இவ்
யம் சிறப்புடன் செயற்
வருகின்றது. இன்று அ
தேவஸ்தானம் சுந்தரத்
விமானமும், பொலிவுறு
மண்டபங்களும் கொண்
தாய் இந்திரலோகத்
வந்திறைஞ்சும் அழகுடை
ளாய் அமைந்துள்ளது.
யாவும் இப்பொழுது புது
கப்படுவதுடன் அசையா
யின் வருகையினுலும்
கோயிலின் அழகு பே
மெருகூட்டப்படுகின்றது.

### ஆசிச்செய்தி

ஓம்சக்தி

அம்பாளின் மகோற்சவ சிறப்பிதழ் சிறப்புறவேண்டி அகிலலோக நாயகி மகாமாரி தாயின் பாதாரரவிந்தங்களை பிரார்த்திக்கும் இவ்வேளையில் விநாயகர், சண்முகர் பவனி வரும் புதிய சித்திரத்தேர்களின் வெள்ளோட்ட விழா காண வாரீர், வாரீர் என அடியார்களை அன்புடன் அழைக்கின்றேன்.

சுபம்

து. சிவஞானச்செல்வம்
அறங்காவலர்,
[illegible]
மகாமாரி அம்பாள்
தேவஸ்தானம்,
புளியங்கூடல்.

### மகாமாரி கீர்த்தனை

இராகம்:- சாவேரி — தாளம்:- ஆதி

பல்லவி

ஆர் ஆதரவு தருவார் அன்னையே நீ ஆதரவு
தர வாராயெனில் உலகில்
— ஆர் ஆதரவு

அனுபல்லவி

சீரார் செருத்தனையில் தேவி மகாமாரி
ஆராதனைக்கு மகிழ் அன்னே அபிராமி
— ஆர் ஆதரவு

சரணம்

ஓயாமல் ஒழியாமல் உன்னையே மறவாமல்
தீதான காரியம் செய்து தொலையாமல்
ஏதாகிலும் பழி எவர்க்கும் செய்யாதுனது
பாதார விந்தத்தை பணிந்திடும் எந்தனுக்கு
— ஆர் ஆதரவு

பாடியவர்:- அம்பிகைதாஸன்

### ஆசிச்செய்தி

அம்பிகையெய்யன்பர்க

புளியங்கூடல் செருத்
பதி ஸ்ரீ மகாமாரி அம்
ரதோற்சவத்தை ஒட்
சிறப்பு மலர் வெளிவரு
பாராட்டுக்குரியது. ப ரா
திக்கு நாமாற்றும் கைங்க
கள் அளப்பரிய மேல்
ஸ்தானம் வகிப்பன.
பிழைகளை எல்
பொறுத்து, எமைக் கா
அருள்பாலிப்பவள் அவ
அவளின் திருவடிகளை இ
பற்றிக்கொண்டால் எல்
சௌபாக்கியங்களும்கை
விழாக்களில் முதன்மை
கும் இவ்வுற்சவம் அரிய
வார்த்தங்களைடள்ளடக்கி
கும். வாழ்க்கையைத் தே
கொள்வது தேர் என்பது
பாளை ஒருமையுடன் வழி
அடியார்கள் எல்லா ந
ளையும் பெற்றுய்வர்.
கையின் திருவடிக் கம
ளைத் தியானித்து எல்லே
கும் எமது உளமார்ந்த
லாசிகளை வழங்குகின்
என்றும் வேண்டு
இன்ப அன்பு
ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிக

சக்திமிகு அம்மையே
சித்தியும் முத்தியும் தந்தருள்வாய்

SkyRose

நீங்கள் விரும்பிய புதிய பழைய பக்திப்பாடல்கள்
ஸ்ரீரியோ முறையில் இசைத் தட்டுக்கள் மூலம்
ஒலிப்பதிவு செய்து கொள்ள

ஸ்கைறேஸ்,
இல: 1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தேவியின் தேர்த்திரு
விழாவினைக் கண்டே
மேவுவோம் இன்பம்! விளையுமே மங்கலம்!

ருகுணாஸ் றேடிங்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

அருள்மாரி வாரி வழங்கும் அன்னை மகாமாரி
சித்திரத் தேரில் ஆரோகணித்து பவனிவரும்
இந்நாளில் வையகம் செழிப்புற,
யாவரும் வளம்பெற
அருள்பாலிக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேம்.

மாரிமுத்து
என்ஜினியரிங்என்ரபிறைஸ்
ஸ்தாபனத்தார்கள்,
ஆசாரி வீதி,
வேலணை மேற்கு, வேலணை-6

அருள்மாரி பொழியும் மகாமாரியின்
இரதோற்சவம் காண்போம்.

நியூ கொழும்பு
ஸ்ரோர்ஸ்
45, ஒல்கொட் மாவத்த,
காலி.

உலகத்து நாயகியே உந்தன் அடிபணிந்தோம்.
தந்தருள்வாய் நல்லருளே!

பெட்டா ஏஜென்சி
ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமகாமாரி அம்பாள் தேவஸ்தான
# விழா சிறப்பு மலர்

ரவேலை ஆரம்பிக்கப்பட் அவ்வேலை பூர்த்தியா தறுவாயில் அவர் இறை திருவடியடைந்தார். றும் பல இடங்களில் று துன்பங்கள், நோய் னங்கள் நிகழ்ந்துவரு போது கூடலூரையும். ச் சார்ந்த கிராமங்க . மக்களையும் எவ் இன்னலும் நேரா வண் காத்துவருவது அன்னை அருளாட்சியே யாகும். கிராமங்களெல்லாம்

யார்கள் வணங்கி உய்தி பெறும் பொருட்டு அருகில் நாகதம்பிரான் கோயில் ஒன் றும் நவக்கிரகங்களின்கோயில் ஒன்றும் அமைக்கப்பட்டு முறைப்படி கிரியைகள் நடை பெறுகின்றன. விழாக்காலங் களில் அன்னையின் அருளைப்

ராத்திரி சிறப்பாகக் கொண் டாடப்படுவது இத் திருக் கோவிலில்தான் என்பது குறிப் பிடத்தக்கது.


இவ்வாறாக அன்னையின் கோவிலைப் புதுக்கியும். திருத் தியும், நித்திய நைமித்த காமிய பூசைகளைத் தவறாது

மாரி என்று காரணநாமம் பெற்றாள் அன்னை. அன்றியும் ''மந்திரமும் தந்திரமும் மருத் துவமுமாகித் தீராத நோய் தீர்த்தருளுதலினால் மகாமாரி என்றும் காரணநாமம் கொண் டவள் கூடலூரர் அன்னை ஸ்ரீமகாமாரி. கருணையே வடி வமாகிய அன்னை தன்னை மெய்யன்போடு வழிபடுமடி யார்களுக்கு இம்மை மறுமை யாகிய இருமையும் கருணை மாரி பொழிந்து அருள்பாலிக் கும் கற்பகமாக விளங்குகின் றாள். ''கார் அணி கற்ப

## வரலாறு

ன்றி வாடும்போது மாரியாகி மக்களின் னை அழியவிடாது வருகின்றாள். இத்தகை அற்புதங்களை கூறு யின் அவை சொல்லி . இருநூறு ஆண்டு முன் இங்கு வைத்துப் பட்ட திருப்பலியீட்டு இன்றும் அம்பாளின் ானத்தில் வைத்துப் பட்டு வருகின்றது. புதம் இன்றும் கூட து, தேயாது அமை இருப்பது அன்னையின் சயலேயாகும்.

ன்மையாகிய அற்பு யெல்லாம் நிகழ்த்தி ரிடம் மக்கள் கொண் விரபக்தியின் காரண வருடைய திருப்பணி வும் முன்னேறி வரு . நல்லை ஆதினமுதல் ீலஸ்ரீ சோமசுந்தர ரிய சுவாமிகள் அவர் ஆசியினாலும் பணிப் ின் கீழும் இவ்வால ப்புடன் செயற்பட்டு றது. இன்று அவளது ானம் சுந்தரத் திரு றம், பொலிவுறு மணி ங்களும் கொண்டுள்ள இந்திரலோகத்தமரம் ஞ்சும் அழகுடையவ மைந்துள்ளது. இவை இப்பொழுது புதுப்பிக் துடன் அசையாமணி ருகையினாலும் இக் ன் அழகு மேலும் டப்படுகின்றது. அடி



பெற வரும் அடியார்களின் பசிப்பிணியைத் தீர்ப்பதற்கு அருகில் எமது இந்து இளைஞர் மன்றத்தினரால அன்னதான மடங்கள் அமைக்கப்பட்டுள் ளன. ஆலயத்தில் வெள்ளிக் கிழமை தோறும் விசேட பூசைகள் நடைபெற்று அம் பாள் அழகு ஒளிரும் மஞ்சத் தில் வீதி உலாவரும் காட்சி குறிப்பிடத்தக்க ஓர் அம்சமா கும். சுமங்கலிகளுக்கான விளக்கீட்டுப் பூசை ஒவ்வொரு பௌர்ணமி தோறும் நடை பெறுவதைஇங்கு விசேட அம்ச மாகக் குறிப்பிடலாம். வசந்த நவராத்திரி காலத்தில் ஒன் பது தினங்களும் நவசண்டிகா ஹோமம், இலட்சார்ச்சனை, குளிர்த்தி ஆகியன நடை பெறுவது சிறப்பானது. வட மாகாணத்திலே வசந்த நவ

வரிசைக் கிரயமாக நடத்தி யும் வருபவர் தந்தைவழிச் சிவதரும பரிபாலகராக விளங் கிச் சிவப்பணி புரிந்துவரும் உயர்திரு து. திருஞானச்செல் வம் அவர்களாவர். அவ ருடைய அருளாட்சி நிறைந்து வரும் இக்காலத்தில் அன்னை ஸ்ரீ மகாமாரியின் ஆலய பரி பாலனம் சிறந்தோங்கி அகில இலங்கையில் வாழும் சைவ நன்மக்களுக்கு சிவானந்தப் பேற்றுக்கு உதவும் விருந்தாக வும், நோய் நீக்கம், பாவ நாசம் புரியும் நெறியின் மருந் தாகவும் அன்னை ஸ்ரீமகாமாரி கருணை பாலிக்கின்றாள்.

### இரதக் காட்சி எங்கும் மாட்சி

அடியவர்களுக்கு கருணை மாரி பொழிதலினால் மகா

கம்'' என மாணிக்கவாசகர் கோவையில் பாடியவண்ணம் கற்பகமாரியாக அன்னை கூட லூரில் எழுந்தருளியுள்ளாள்.

புகழோடு பெருமை நல்கும் கூடலூர்த் திருப்பதியின் திரு வீதியிலே இன்று முதன் முறையாக பிள்ளையார், முரு களுகிய கடவுளர்க்கும் சேர் த்து மூன்று சித்திரத் தேர்கள் இழுக்கப்படவுள்ளன. அன்னை ஸ்ரீ மகாமாரி தேரிலே பவனி வருங் காட்சி நம் கண் கொளாக் காட்சியாகும். விண்ணவரும், மண்ணவரும் கண்டு மனம் மகிழும் இக்காட் சியைக் காணக் கண்கோடி படைத்திலனே பிரமனென வாயும் மனமும் எம்மை அறி யாமலே சொல்லும் அவ் வேளையில் நாம் எல்லோரும் எம்மை மறந்து எம் சூழலைத் துறந்து, அவளின் அருள் மய மாகி ஆனந்தபரவசமுற்றவர் களாகிவிடுவோம், இத்தகைய அரிய பெரிய பேற்றினை நல் கத் துணைபுரிந்த அம்பிகை யின் திருவருளை முதலில் வணங்குவோம். வாழ்த்து வோம்.

எங்கும் இன்னலே சூழ்ந் திருக்கும் இன்றைய காலகட் டத்தில் எமக்கு ஒளிவிளக் காக உறுதுணையாக விளங்கு வது ஒன்றேயொன்று. அது தான் பரம்பொருள். சைவர்கள் சிவன் என் பர். சிவத்தோடு என்றும் நீங்காது சிவத்தின் சக்தியாக விளங்குபவளே அகிலாண்ட கோடிஈன்ற பிரமாண்டநாயகி அவளின்றேல் அவனில்லை. அணுவும் அசையாது. அன்னை பராசக்தியே ஐந்தொழில் செய்கிறாள். படைப்பவள் அவளே! காப்பவள் அவளே! அனைத்தும் அவளே! அனைத் தும் அவளே! இவ்வாறு வேத சிவாகமங்கள் கூறுகின்றன. எங்கள் அனுபவமும் அதுவே. எனவே அனைவரும் ஆனந் த[illegible] நல்வாழ்வு வாழ அன்னையின் இத்தேர்த் திருவிழா [illegible]டியாக

(7-ம் பக்கம் பார்க்க)

### ...சிச்செய்தி

...கைமெய்யன்பர்களே!

...க்கூடல் செருத்தனைப் மகாமாரி அம்பாள் வத்தை ஒட்டிச் மலர் வெளிவருவது க்குரியது. பராசக் மாற்றும் கைங்கரியங் ாப்பரிய மேன்மை வகிப்பன. எமது ்னை எல்லாம் து, எம்மைக் காத்து லிப்பவள் அவளே. திருவடிகளை இறுகப் காண்டால் எல்லாச் க்கியங்களும்கைகூடும் ரில் முதன்மை வகிக் வுற்சவம் அரிய தத்து ங்களைஉள்ளடக்கி நிற் ழ்க்கையைத் தேர்ந்து து தேர் என்பது அம் ருமையுடன் வழிபடும் கள் எல்லா நலன்க பெற்றுய்வர். அம்பி திருவடிக் கமலங்க ானித்து எல்லோருக் து உளமார்ந்த நல் வழங்குகின்றோம். றும் வேண்டும் இன்ப அன்பு

**...லஸ்ரீ ஸ்வாமிகள்**

### மூலாதாரசக்தி

இராகம்:- ஸிந்துபைரவி தாளம்;- ஆதி

**பல்லவி**

ஓங்காரி மகாமாரி
உமையவள் பாதங்கதி
ஆங்காரி ஆனந்த
பைரவி திரிசூலி

**அனுபல்லவி**

பாங்கான புளியங்
கூடல் செருத்தனையின்
பூங்காவனத் தலம்
பொலியும் அன்னையான

**சரணம்**

பட்டுச் சேலை மடி
கட்டிக் கொண்டு மாரி
பொட்டிலங்கிட இதழ்
புன்னகை பூத்திருப்பாள்
வட்ட மதி முகத்தில்
வண்ண வருள் பொலி
அட்ட திக்குகள் போற்றும்
அகிலாண்டேஸ்வரி

இயற்றியவர்:- **கவிமாமணி**
இணுவையூர் **பிரம்மஸ்ரீ மா. த. ந.** [illegible]

தேரோட்டம் காண்போம்
வீதிவலம் வருவோம்
மகாமாரி அம்பாளின் கருணையால் உயர்வோம்

**நித்தியகல்யாணி ஜுவல்லறி,**

தங்கப்பவுண் நகை வியாபாரம்
162, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உலகெலாம் காக்கும்
மகாமாரி அம்பாளின்
தலமெலாம் வியந்து
தேர்த்திருவிழா காண்போம்!

**ஸ்ரீ வாணி ஜுவல்லேர்ஸ்**

தங்க நகை வியாபாரிகள்
173, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பேரருள் செய் தேவியின்
தேரோட்டம் பாவர்க்கும்
கவலைகள் நீக்கும்

**அலங்கார் நகை மாளிகை**

169, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

எங்கள் அன்பு வடிவான அம்மையே
ஆண்டருள் புரிவாய் எம்மையே

**மல்லிகா கிறீம் ஹவுஸ்,**

ஆலடிச்சந்தி, மானிப்பாய்.

பக்தர் துன்பம் நீக்கி அருளும்
மகாமாரியின் தேர்த்திருவிழா
எல்லா நன்மைக்கும் தோற்றுவாய் ஆகும்.

**அம்பாள் றேடேர்ஸ்**

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈரானின் இராணுவ பலத்தை வலுப்படுத்த

# சோவியத் உதவும் - ஒப்பந்தம் கைச்சாத்து

(மாஸ்கோ)

**ஈரானுக்கு இராணுவ உதவி வழங்குவதற்கான ஒப்பந்தமொன்றில் சோவியத் அதிபர் மிகையில் கொர்பச்சேவும் ஈரானிய பாராளுமன்ற சபாநாயகர் ஹஸ்மி ரப்சன் ஜானியும் கைச்சாத்திட்டுள்ளனர். இதன்மூலம் ஈரானுக்கு அடுத்த வருடம் முதல் சோவியத்தின் இராணுவ உதவிகள் கிடைக்கவுள்ளது.**

கடந்த ஐந்து நாட்களுக்கு முன் சோவியத்யூனியனுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஈரானிய சபாநாயகர் ஹஸ்மி ரப்சன் ஜானி சோவியத் அதிகாரிகளுடன் மேற்கொண்ட பல பேச்சுவார்த்தைகளையடுத்தே மேற்படி ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இந்த ஒப்பந்தம் மூலம் ஈரானுக்கு இராணுவ உதவிகள் வழங்கப்படுவதுடன் இராணுவ தளபாட உற்பத்திக்கும் விமான தயாரிப்புக்குமான தொழில்நுட்ப உதவியும் வழங்கப்படவுள்ளது. இதன்மூலம் இரு நாடுகளிடையேயும் உறவுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இருதரப்பிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொருளாதார தொழில் நுட்ப உதவிகள் குறித்தும் இருதரப்பு நாடுகளும் விரைவில் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவுள்ளன. இதற்கான பேச்சுக்கள் உயரதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கிடையில் சோவியத்தில் முஸ்லிம்கள் பெருமளவில் உள்ள அஸர்பைசான் பகுதிக்கு சபாநாயகர் ஹஸ்மி ரப்ஸன் ஜானி விஜயம் செய்துள்ளார்.

## சீனுவில் தொடரும் மரண தண்டனை

(பீக்கிங்)

சீனுவில் ஜனநாயக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு உயர் நீதிமன்றம் மரணதண்டனை தீர்ப்பளிப்பதும், தண்டனை நிறைவேற்றப்பட்டுவருவதும் தொடர்பாக உஊர்ஜிதமான செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை சுமார் 20பேருக்கு இவ்வாறு மரணதண்டனை, சுட்டுக்கொல்வதன் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் பலருக்கு இத்தண்டனை இன்று நிறைவேற்றப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

உலகத் தலைவர்களின் பலத்த கண்டனத்திற்கும் மத்தியில் சீன அரசு இத்தண்டனையைத் தொடர்ந்தும் நிறைவேற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

## பெருவில் விமான விபத்து: 60 பேர் பலி!

(லிமா)

பெருவில் விமானப்படை விமானமொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 60 பேரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெருவின் தலைநகர் லிமாவை நோககி ஸான்றிமோன் எனும் இடத்திலிருந்து புறப்பட்டுசிறிதுநேரத்துக்குள்விமானம் விபத்துக்குள்ளானது. விமானம்வானிலே வெடித்துச் சிதறியபோது அதிலிருந்தஎவரும்உயிர் தப்பவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானத்தின் சிதைவுகள் அப்பகுதியிலுள்ள அடர்ந்த காட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. விமான விபத்திற்கான காரணம் பற்றி தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 14 வருட உள்நாட்டு நெருக்கடித் தீர்வு; அங்கோலாவில் யுத்த நிறுத்தம்

(லண்டன்)

அங்கோலாவில் கடந்த 14 வருடங்களாக இடம்பெற்று வரும் உள்நாட்டு யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவரும் முதல் முயற்சியாக இன்று முதல் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வருகிறது.

அங்கோலா அரசுக்கும் 'யுனிற்றா' கிளர்ச்சிப் படைக்குமிடையில் கடந்த 14 வருடங்களாக பெரும் யுத்தம் இடம்பெற்றுவருகிறது. அங்கோலாவிலிருந்து பிரிந்து தனி இராஜ்யத்தை அமைக்கும் பொருட்டே 'யுனிற்ரா' கிளர்ச்சிப்படை இந்த யுத்தத்தில் இறங்கியது.

நேற்று முன்தினம் 18 ஆபிரிக்க முன்னரங்கு நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்ட விசேட மாநாடொன்றிலேயே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது. இம்மாநாட்டில் அங்கோலா ஜனதிபதியும் 'யுனிற்ரா' கிளர்ச்சிப்படைத் தலைவரும் நேருக்குநேர் முதன் முதலாகசந்தித்தனர்.

இன்று முதல் இருதரப்பும் சகல இராணுவ, கிளர்ச்சி நடவடிக்கைகளை நிறுத்தவுள்ளதாகவும் மேலும் பேச்சுவார்த்தை மூலம் மேலதிக தீர்வு விபரங்கள் குறித்து ஆராயப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14 வருட உள்நாட்டு யுத்தத்தில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும் அரசுதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

## 'ரயில் மூலம் மாவைப் பெற ஏற்பாடு செய்யுங்கள்'

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுச் சங்கங்கள், திருமலைக்கு லொறி கொண்டு போய், மாவைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றன. இக்கோரிக்கை மிகக் கஷ்டமானது. ஆனபடியால் கப்பல் மூலம் காங்கேசன் துறைக்கு அல்லது ரயில் மூலம் வவுனியாவுக்கு மாவைக் கொண்டுவர ஒழுங்குசெய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

யாழ். மாவட்ட தேசியக் கூட்டுறவுச் சபைத் தலைவரும், தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கத் தலைவருமான திரு. சி. சிவமகாராசா யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

சென்ற பல வாரங்களாக மாக் கப்பல் வராத காரணத்தால் கூட்டுறவுச் சங்கக் கடைகளில் மா இல்லை. சென்றமுறை கொழும்பு சென்றபொழுது உணவுத்திணைக்களத்துடன் தொடர்பு கொண்டிருந்தேன். கூடிய விரைவில் கப்பல் மூலம் மா அனுப்ப ஒழுங்கு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது:

ஆனல் இற்றைவரை மாக் கப்பல் வரவில்லை. எப்பொழுது வரும் என்பது தெரியவில்லை. ஆகவே ரயில் மூலமாவது கூட்டுறவுச்சங்கங்களுக்குத் தேவையான மாவைப் பெற்றுத் தர ஒழுங்கு செய்துதருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

உணவு முத்திரைகள் இப்பொழுதுதான் விநியோகிக்கப்படுகின்றன. ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மூன்று மாதங்களுக்குரிய உணவுப் பொருள் கொடுக்கவேண்டியுள்ளது. மக்களுக்கு அத்தியாவசியம் தேவையான மா இல்லாத காரணத்தால் பெரிதும் கஷ்டமான சூழ்நிலை உருவாகியுள்ளது. இதற்கு வேண்டிய ஒழுங்கு செய்து, ரயில் மூலமாவது மாவைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிரிக்கெட்

## இங்கிலாந்து 286

(லீட்ஸ்)

ஆஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் லீட்ஸில் நடைபெறும் 2-வது கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து அணி முதல் இனங்சில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றது.

முதல் நாள் ஆட்டநேரமுடிவில் ஆஸ்திரேலிய அணி விக்கெட் இழப்பின்றி 4 ஓட்டங்களைப் பெற்றது.

ஆறு டெஸ்ட்போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் முதல் டெஸ்டில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது தெரிந்ததே.



இந்திய அமைதிப்படை அதிகாரி பிரிகேடியர் எஸ், என். ஹில் யாழ். இரத்த வங்கிக்கு இரத்ததானம் வழங்கும்போது எடுக்கப்பட்ட படம்.

## மகளிர் ஐ. நா. சங்கம் உதயம்

(பருத்தித்துறை)

புலோலி மத்திக் கிராமத்தில் மகளிர் ஐக்கிய நாணய சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

காந்தியூர் சனசமூகநிலைய மண்டபத்தில் இம்மகளிர் ஐக்கிய நாணய சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் செல்வி மா. தயாவதி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. பொ. மோகன், கிராமசேவை அலுவலர் திரு. எஸ். எ. ஞானச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம்மகளிர் சங்கத்தின் தலைவியாக செல்வி. மா. தயாவதியும், செயலாளராக இ. றதிஞவும், பொருளாளராக திருமதி ந. சரோஜினியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## டாக்டர் டானியல் பூவரின் பிறந்ததின விழாவும் பேராலய திறப்புவிழாவும்!

(சுன்னுகம்)

புனரமைப்பு செய்யப்பட்ட தென்னிந்திய திருச்சபை யாழ் அத்தியட்சாதீனத்தின் வட்டுக்கோட்டை தலைமைப் பேராலயத்தின் திறப்பு விழாவும், டாக்டர் டானியல் பூவரின் இருநூருவது பிறந்ததின விழாவும் எதிர்வரும் 27-ம் திகதி செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டையில் நடைபெறவுள்ளது.

அன்று காலை எட்டு மணிக்கு ஆலயப் பிரதிஷ்டை வைபவங்கள் ஆரம்பமாகும். [illegible] பழையில் அமைந்துள்ள [illegible] யல் பூவரின் கல்லறையில் பத்துமணிக்கு மலர் வளையம் சாத்தும் வைபவம் இடம் பெறும். முற்பகல் பதினெரு மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் கலைநிகழ்ச்சிகளும், பிற்பகல் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

இந்த வைபவங்கள் தொடர்பாக எதிர்வரும் 24, 25, 26 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை ஒட்லி மண்டபத்தில் நீதி, சமாதானம், சிருஷ்டிப்பின் மகிமை ஆகிய தலைப்புகளில் [illegible] பதாகவும் [illegible] கிறது.

## அன்பளிப்பு

(மன்னூர்)

மன்னூர் ஆதார வைத்திய சாலைக்கு மன்னூர் ஐக்கிய நாடுகள் புனர்வாழ்வு உயர் ஸ்தானிகரின் நிறுவனம் இரு புதிய அம்புலன்ஸ் வண்டிகளை அன்பளிப்புச் செய்துள்ளது. இதனுல் ஆபத்தான நிலையில் இருக்கும் நோயாளிகளை அனுராதபுரம், யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு கொண்டுசெல்ல உதவியாக உள்ளது.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைகிறது. எல்லாம்வல்ல அன்னை ஸ்ரீமகாமாரித்தாயின் அருள் மழையினுல் நனைந்திடும் அடியார்கள் அருட்கடாட்சம் பெற்று அனைவரும் சாந்தியும் சந்தோஷமும் பெற்று பெருவாழ்வு காண்போமாக.

- அடியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில்
# டீசலுக்குத் தட்டுப்பாடு: பாவனையாளர்கள் பாதிப்பு

[பருத்தித்துறை]

பருத்தித்துறை, புலோலி, நெல்லியடிப்பகுதியில் டீசலுக்குப்பெரும் தட்டுப்பாடேற்பட்டுள்ளது. இப்பகுதிகளில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள் விற்பனை நிலையங்களிலும் டீசல் இல்லை. இதனால் இப்பகுதி வாகனச்சொந்தக்காரர்கள் இயந்திர இயக்குநர்கள்பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

பாவனையாளர்கள், இப்பகுதிக்கு வேண்டிய டீசலை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு, இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபன யாழ் மாவட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## ஆர்ப்பாட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இதேவேளை, அவசரகால நிலைமையின் கீழ் கைது செய்யப் படுபவர்களோ அல்லது சுட்டுக் கொல்லப்படுபவர்கள் பற்றியோ அரசுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியாதென்பதும் குறிப்பிடத்தக்கது.

## தெற்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தென்பகுதியில் குறிப்பாக காலி, மாத்தறை, கேகாலை, யக்கலைப் பகுதிகளில் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் பாதுகாப்புப் படையினர் இருவரும், ஊர்காவற் படையினர் நால்வரும் அடங்குவர். மாகாணசபை உறுப்பினர் இருவர் பலத்த தாக்குதலுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பல்கலைக்கழகத்தில்

இதேவேளை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் விளம்பரப் பலகையினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்ளூர்த் தயாரிப்புக் குண்டு ஒன்று பாதுகாப்புப் படையினரால் உரிய நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இ. போ. ச. ஊழியர்களுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று முன்தினம் களனி, மொறட்டுவ, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, றுகுணு, கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

## கதிர்வேலாயுத சுவாமி கோவில் லட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார்பண்ணை செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் லட்சார்ச்சனை கடந்த 18ம் திகதி ஆரம்பமாகியுள்ளது. நாளை மறுதினம் திங்கட்கிழமை வரை லட்சார்ச்சனை நடைபெறும்.

26-ம் திகதி மணவாளக் கோலமும், சங்காபிஷேகமும் சுவாமி வீதிஉலா எழுந்தருளி காட்சி கொடுத்தலும் நடைபெறும்.

## கூடைப்பந்தாட்ட போட்டி

[மன்னார்]

அண்மையில் மன்னார் மாவட்ட பாடசாலைகளுக்கான கூடைபந்தாட்டப் போட்டி மன்னார் அல் அசார் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் 15வயதுக் குட்பட்டவர்களுக்காவபோட்டியும் இதேபோல் 17, 19 ஆகிய வயதுகளுக்கான போட்டியும் நடைபெற்றது. முதலிடத்தை மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி பெற்றுக்கொண்டது. மாவட்டத்திலுள்ள சகல பெண்பாடசாலைகளும் போட்டியில் பங்கெடுத்தன.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(மன்னார்)

பெரிய நாவற்குளம் சென் தோமஸ் விளையாட்டுக்கழகம் அமரர்களான சில்வா, அஜித் ஆகியோரின் ஞாபகார்த்த நினைவாக அண்மையில் 9பேர் கொண்ட மாவட்டரீதியான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியை நாகதாழ்வு சென் தோமஸ் விளையாட்டு மைதானத்தில் நடாத்தியது.

வங்காலை, மன்னார், பேசாலை உயிலங்குளம், அடம்பன், விடத்தல்தீவு ஆகிய பகுதிகளிலுள்ள விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றிய இப்போட்டியில் மன்னார் கழகம் முதலிடத்தைப்பெற்றது.

ஹறன் சினிமா
(யாழ்ப்பாணம்)
3-வது வெற்றி வாரம்
சத்தியராஜ்-நதியா
நடித்த
சின்னத்தம்பி
பெரியதம்பி

நியூசாந்தி யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
பயங்கரக் கராட்டிகள்
வாள்சண்டைகள், கார்
ஓட்டங்கள் நிறைந்த
படம்.
MAJESTIC
THUNDERBOLT
(C/scope)

## இன்று

(யாழ்ப்பாணம்)

'1983 அகதிகள் புனர்வாழ்வுத் திட்ட'த்தின் கீழ் இன்று 'நொறுட்' உதவிகள் வழங்கப்படும்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று காலை நடைபெறும் மேற்படி வைபவத்தில் தையல் மெஷின்கள் உட்பட மின்பிடி வலைகள், மற்றும் உதவிகள் வழங்கப்படுமென்று மேற்படி புனர்வாழ்வுத் திட்டத் தலைவர் அறிவித்துள்ளார்.

## நேற்றும் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றும் இரண்டாம் நாளாக விரிவுரைகளுக்குச் செல்லாது பகிஷ்கரித்தனர்.

மாணவர்கள் தமது பாதுகாப்புத் தொடர்பாகப் பாடசாலைகளைப் பகிஷ்கரித்துவருவதற்கு ஆதரவு தெரிவித்தே பல்கலைக்கழக மாணவர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

## தமிழர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பத்மநாபா அறிவித்துள்ளார்.

இந்தத் தேசிய சபையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் ஆகியன இணைந்துள்ளன என்றும் திரு. பத்மநாபா தெரிவித்துள்ளார்.

அமைதிப்படை விலகலை எதிர்த்து நேற்று திருமலையில் நடைபெற்ற ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் 'உரையாற்றுகையில் அவர் இத் தகவலைத் தெரிவித்தார்.

## புதிய வீட்டுத் திட்டம்

(மன்னார்)

தென் இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் நாடு திரும்பிய அகதிகளுக்கு மன்னாரில் யு. என். எச். சி. ஆர். திட்டம் மூலம் வீடுகள் அமைத்து கொடுக்கப்பட்டன.

தற்சமயம் தென்இந்தியாவிலிருந்து ஏற்கனவே வேறு மார்க்கமாக வந்த மன்னார் மாவட்டமக்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்கும் ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் நிறுவனம் முன்வந்துள்ளது. இதனை மன்னார் அரச அதிபர் ஊடாக தேசிய வீடமைப்பு அதிகாரசபை செய்வதற்கு ஏற்பாடாக உள்ளது.

## "சைவ அடியார்களின் பாதயாத்திரை சமய எழுச்சியைத் தூண்டுகிறது"

(மாவிட்டபுரம்)

"நாயன்மார்கள் அக்காலத்தில் திருத்தல பாதயாத்திரை மேற்கொண்டது போன்று இன்று சைவ அடியார்கள் பாதயாத்திரை மேற்கொள்வது சமய உணர்ச்சியையும், சமய எழுச்சியையும் பெருக்கும் தூண்டுகோலாக அமைகிறது. இப் பாத யாத்திரை சைவ உலகுக்கு நிறைந்த பயனை அளிக்கும்"

இவ்வாறு வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்றுவரும் திருத்தல பாதயாத்திரை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலை வந்தடைந்த சமயம் வரவேற்று உரையாற்றிய மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் கூறினார்.

பாதயாத்திரையை நடத்தி வந்த ஆத்மஜோதி நா. முத்தையாவிற்கு ஆதீன கர்த்தா மாலை சூட்டி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்; இப்படியான பாதயாத்திரைகள் மாதம் ஒருமுறை கிராமங்கள்தோறும் இடம்பெற்றால் அக்கிராமங்களில் தெய்வீக சக்தி பரிணமித்து மக்கள் நல்வாழ்வு வாழ வழியேற்படும்" என்றார்.

ஆத்மஜோதி நா. முத்தையா பேசுகையில்; மாவை ஆதீனத்திற்கும் தமக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்றும், சமய இலக்கிய வளர்ச்சிக்கு ஆதீனத்தின் உதவியுடன் பல நல்ல பணிகளை ஆற்றமுடிந்ததென்றும், தொடர்ந்தும் இவ்வாறான பணிகளுக்கு மாவை ஆதீனம் உதவவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

மதிய போசனத்தையடுத்து பாதயாத்திரை இவ்வாலயத்திலிருந்து புறப்பட்டுச் சென்றது.

## புதிய சம்பளம்

(மன்னார்)

குறிக்கப்பட்ட சம்பளத் திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான சம்பளம் மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வழங்கப்படவிருக்கின்றது. முன்னைய மாதங்களில் வழங்கப்படவேண்டிய பாக்கி சம்பளமும் இத்துடன் சேர்த்து வழங்கப்படும். இந்த சம்பளத்திட்டம் ஏனைய மாவட்டங்களில் ஏற்கனவே வழங்கப்பட்ட போதிலும் இதுவரையிலும் மன்னாரில் வழங்கப்படவில்லை.

## கொழும்புத்துறை ம. வி. முதலிடம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் கொழும்புத்துறை மகாவித்தியாலயமாணவர்கள் மூன்று நிகழ்ச்சிகளில் முதலாமிடம் பெற்றுள்ளார்கள்.

உயரம் பாய்தல் போட்டியில் எஸ். ரமேஸ் முதலாம் இடத்தையும், பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் செல்வி பா. மரிய ஜக்குலின் முதலாமிடத்தையும், 15 வயதிற் குட்பட்டோருக்கான பெண்கள் அஞ்சலோட்டப் போட்டியில் கொழும்புத்துறை ... முதலிடம் பெற்றுள்ளன.

## பாலர் ஆசிரியர் பயிற்சி கைதடியில் ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

அறவழிப்போராட்டக் குழுவினால் நடத்தப்படவுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி ஆரம்ப விழா திரு. வி. எஸ். துரைராஜா தலைமையில் அடுத்த மாதம் 1ம் திகதி நடைபெறவுள்ளது.

கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக பேராசிரியர் கா. சிவத்தம்பி கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக கல்வி அதிகாரி ஜனாப் எஸ். ஏ. சீ. எம். இனூனா, சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை, நவீல்ட் துணை அதிபர் திரு. ஜே. எஸ். டேவிட் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள்.

பயிற்சிநெறி அறிமுக உரையை நவீல்ட் துணை அதிபர் திரு. கே. கோபாலகிருஷ்ணன் நிகழ்த்தவுள்ளார்.

1988-ம் ஆண்டு அறவழிப் போராட்டக்குழுவினால் நடத்தப்பட்ட பாலர் ஆசிரியர் பயிற்சி நெறியில் கலந்து கொண்டு சித்திபெற்றவர்களுக்கு விழா இறுதியில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

## புதிய பூக்கள் முதலிடம்

(மன்னார்)

மன்னார் மறைமாவட்டத்திலுள்ள பங்குகளுக்கான மறை நாடகப்போட்டி அண்மையில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது. எல்லாப் பங்குகளிலுமிருந்து சிறந்த நாடகங்கள் அரங்கேற்றப்பட்டு போட்டியில் பங்கெடுத்தன. முதலாமிடத்தை பேசாலைப்பங்கு 'புதிய பூக்கள்' என்ற நாடகத்தை அளித்து பெற்றுக்கொண்டது. இரண்டாம் இடத்தை மன்னார் பங்கும், மூன்றாமிடத்தை வங்காலைப் பங்கும் பெற்றுக்கொண்டது.

## கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் புதிய கிராமமாக அண்மையில் உருவாக்கப்பட்ட கிரிசுட்டான் கிராமத்துக்கு தினமும் காலையிலும் மாலையிலும் பஸ்சேவை நடத்துமாறு அக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இக் கிராமத்தின் ஸ்தாபகரும் இக்கிராமத்தை உருவாக்கியவருமான அருட்திரு ஜே. பி. தேவராஜா இந்த போக்குவரத்து வசதிக்கான பூர்வாங்க ஏற்பாடுகளைசெய்ய முன்வந்துள்ளார்.

## கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் திரு. சி. சிவஞானசுந்தரம் அவர்களின் சிரேஷ்ட புத்திரன்திரு. சி. சிவச்சந்திரன் அவர்கள் கனடாவில் அகால மரணம் எய்தியதையிட்டு வித்தியாலயத்தைச்சேர்ந்த ஆசிரியர்கள் மாணவர்கள் எங்கள் அஞ்சலியையும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுறோம். ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/தும்பளை சிவப்பிரகாச ம. வி.
பருத்தித்துறை.

[சி-3004]

## 31ம் நாள் நினைவஞ்சலி

இளங்காலைப் பொழுதே — நல்
இசை மீட்டும் குழலே



பெர்னண்டோ பெல்த்மன் சியாந்தகுமார்
(FERNANDO FELTHMAN CHIYANTHAKUMAR)

பிறப்பு: 02-02-78 இறப்பு: 25-05-89

வளமான வாழ்விங்கு வையகத்தேது - எம்
தனமான தமிழ்மகன் நீ தரையிற்போதும் - அந்
தகராக தவிக்கிறோம் தரணியின்மீது - எம்
விழிகாண வருவதை விரைவாகக் கூறு

873, கடற்கரை வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

உனது பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதரிகள்,
உறவினர்.

(சி-3005)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கு 2 வருட சம்பளக் கடன் கல்விஅமைச்சு ரூ. 130லட்சம் ஒதுக்கியது!

## கோட்டக்கல்வி அலுவலகம் வழங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும் கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கும் இரண்டு வருட சம்பள முற்பணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

கல்வி அமைச்சு இதற்காக ஒரு கோடி 30 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள கோட்டக்கல்வி அலுவலகங்களூடாகவே முற்பணம் வழங்கப்படவுள்ளது.

கடந்த கால வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட சுமார் 2 ஆயிரம் ஆசிரியர்களும் யாழ். கல்வித்திணைக்கள ஊழியர்களும் இந்த 2 வருட சம்பள முற்பண கடனுக்கு விண்ணப்பித்துள்ளனர் என யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

## அமைதிப்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்த்துவைக்கத் தவறியதே இந்தியப் படை இங்கு வருவதற்கு முக்கிய காரணம்.

''அமைதிப் படை இங்கிருந்து வெளியேறிவிட்டால் வடக்கு–கிழக்கு மாகாணத்தில் அமைதியை ஏற்படுத்த எங்மால் முடியும்.''

## வீடுகள் தீக்கிரை

(வவுனியா)

வவுனியாவில் மருக்காரம் பலை என்னும் இடத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றையடுத்து மூன்று வீடுகள் தீக்கிரையாகின.

இரு தரப்பினருக்குமிடையில் மோதல் இடம்பெற்றதாகவும், குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் அச்சத்தினால் அயல் இடங்களை நோக்கி ஓடியதாகவும் அறியப்படுகிறது.

## நாகர்கோவிலில் 4 இலங்கையர் கைது

(சென்னை)

தமிழ்நாட்டிலுள்ள நாகர்கோவில் நீதிமன்றமொன்றில் பாஸ்போர்ட், விசா எதுவுமின்றி இந்தியா வந்திருந்த நான்கு இலங்கை வாசிகள் மீது நடைபெற்ற வழக்குவிசாரணையைப் பார்ப்பதற்காக வந்திருந்த நான்கு இலங்கையரை இந்தியப் பொலிசார் கைதுசெய்தனர்.

இவர்களும் பாஸ்போர்ட், விசா எதுவுமின்றி இந்தியா வந்திருந்ததாக அறிவிக்கப்பட்டது.

## இலங்கைத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ராஜீவ் காந்தி மேற்கொண்டிருக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறு தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதியை தமிழ்நாடு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. கருப்பையா மூப்பனார் கேட்டுள்ளார்,

திருச்சியில் நேற்று பத்திரிகையாளரிடம் பேசியபோதே அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

இலங்கையிலிருந்து அமைதிப் படையை விலக்கிக்கொள்வதுபற்றி இந்தியாவும் இலங்கையும் இணைந்து முடிவெடுக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

## கொழும்பு யாழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணத்திற்குத் தேவையான எரிபொருட்கள் மா ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு நேற்று சரக்கு ரயில் ஒன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

மாவும், எரிபொருளும் தாராளமாக வந்து சேர்ந்துள்ளதால் யாழ். குடா நாட்டில் இப்பொருட்களின் விலை அதிகரிப்பில் மாற்றம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை திருகோணமலை பிறிமா ஆலையில் மா ஏற்றுவதற்காக நூறு லொறிகள் சென்றுள்ளன.

ஒரு கிலோ மா எட்டு ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுவது கண்டு பிடிக்கப்பட்டால், கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். உணவுத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன,

## தியேட்டர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாகத் தெரியவருகிறது.

தியேட்டர் உரிமையாளர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட பின்னர் மோட்டார்சைக்கிளில் சென்றபோது இச்சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் சடலம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை முடிவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(கு)

## வெடிகுண்டு: இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நிலத்துக்கடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த சம்பவம் ஒன்று மன்னாரில் இடம்பெற்றது.

மனனார் முந்தலில் உள்ள அந்தோனியார் கோவிலடியில் மற்றும் சிலருடன் துப்பரவு பணியில் ஈடுபட்டிருந்த பள்ளிமுனையைச்சேர்ந்த பாபுலு சத்தியசீலன் (வயது 28) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்த இளைஞர் கோவிலடியில் நிலத்தைக்கிண்டும் போதே நிலத்திற்கு அடியிலிருந்த குண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்ததாம்.

காயமடைந்தவர் உடன் மன்னார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். (கு)

## ஈரோஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

'ஈரோஸ்' தலைவர் திரு.வே. பாலகுமாரன் எடுத்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை என்று 'ஈரோஸ்' வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

மட்டக்களப்பிலும் 'ஈரோஸ்' உறுப்பினர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டது தெரிந்ததே.

## இன்று

(யாழ்ப்பாணம்)

1989 - 90-ம் ஆண்டிற்கான யாழ். லயன்ஸ் கழக உறுப்பினர்கள் பதவியேற்பு வைபவம் இன்று சனிக்கிழமை சுபாஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் லயன் சி. மகேசனும் அவரது பாரியார் திருமதி தவமணி மகேசனும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கிறார்கள்.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

நற்சமூக நடுநிலையத்தினால் நடத்தப்பட்ட தலைமைத்துவ பயிற்சி நெறியில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று நடைபெறவுள்ளது.

நிலைய இயக்குநர் கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல் தலைமையில் இவ் வைபவம் நடைபெறவுள்ளது.

## லண்டன் 'கார்டியன்' தகவல்

(லண்டன்)

இந்திய அரசின் உதவியுடன் தமிழ் ஈழத்தைப் பிரகடனப்படுத்த இலங்கையிலுள்ள சில தமிழ்க் குழுக்கள் திட்டமிட்டுள்ளதாக லண்டனிலிருந்து வெளிவரும் 'கார்டியன்' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

## மாணவர் இருவர் கைதாகி விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

## சூட்டுக்காயங்களுடன் மரணமானார்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி 155-ம் கட்டையில் சூட்டுக் காயங்களுடன் மரணமானவர் ஆண்டி இராசு (20 வயது) என்று அடையாளம் காணப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆபத்தான நிலையில் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரும்போதே இவர் மரணமானார்.

சடலமாக யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு, விசாரணை முடிவில் சடலம் அவரது நண்பர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மரணமானவர் கிளிநொச்சி பாரதிபுரம்வாசி என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

(கு)

## மரண அறிவித்தல்

### கந்தையா பாலசுப்பிரமணியம்



கந்தையா பாலசுப்பிரமணியம் காலமானார். இவர் காலஞ்சென்ற கந்தையா பார்வதிப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற குட்டித்தம்பி இரத்தினத்தின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சியாமளா, உசாமளா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஈஸ்வரன் (மலேசியா), மகாதேவி, இராசேந்திரன் (லண்டன்), மகேந்திரன், இந்திராணி, ஞானம்பிகை, புவனேஸ்வரன் (சிவம் மோட்டோஸ்) ஆகியோரின் சகோதரனும், பேரின்பநாயகம், அருணாசலம், இராசலிங்கம் ஜெயலக்குமி, பத்மவசந்தி, இராசேஸ்வரி, சிவபாக்கியம், பரராசசிங்கம், ஜெயராசசிங்கம், தேவராசசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், வேலாயுதபிள்ளை, றஜனி, சரோஜினி, சரோஜினி ஆகியோரின் சகலனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-06-89 ஞாயிறு காலை 10-00 மணிக்கு கட்டுடை இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக, பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: கந்தையா பார்வதிப்பிள்ளை

கட்டுடை, மானிப்பாய். (தாய்) (சி 8220

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் கனகலிங்கம்

மண்கும்பான் மேற்கைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணம் நித்தியகல்யாணி ஜுவல்லறி பங்காளரும், கனகு மரக்காலை மண்கும்பான் உரிமையாளரும், மண்கும்பான் வீரகத்தி விநாயகர் ஆலய பெறுநர்சபைப் பொருளாளருமான வைத்திலிங்கம் கனகலிங்கம் அவர்கள் 21-06-89 அன்று அகால மரணமானார். இவர் மண்கும்பான் மேற்கு வைத்திலிங்கம் சின்னம்மா தம்பதிகளின் புதல்வரும், மண்கும்பான் மேற்கு சோமசுந்தரம், காலஞ்சென்ற பூங்காவனம் தம்பதிகளின்மருமகனும், குணேஸ்வரியின் அன்புக் கணவரும், செயந்தன், குகப்பிரியா, நித்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரசூரியர் (ஜெர்மனி), குணரட்ணம் (ஆசிரியர், தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரி), பரராசசிங்கம் (வர்த்தகர், அக்குரஸ்ஸ), திருஞானம் (வர்த்தகர், அக்குரஸ்ஸ), மகாலிங்கம் (கனகு மரக்காலை, மண்கும்பான்), மகேஸ்வரி யோகநாதன், கனேகேஸ்வரி யோகநாதன் அரசரெட்ணம் (கனடா), அன்னலெட்சுமி வேலும்மயிலும் (பிரான்ஸ்), மயில்வாகனம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், வர்ணகுலசிங்கம் (லொறி ரான்ஸ் போட், மண்கும்பான்), பரமேஸ்வரி இராசலிங்கம், சிவலிங்கம் (சோதி, ஜெர்மனி), ஜெயலட்சுமி குமாரசூரியர், சரஸ்வதி குணரட்ணம், மங்கையற்கரசி பரராசசிங்கம், நிர்மலா திருஞானம், மல்லிகாதேவி மகாலிங்கம், யோகநாதன் (கனடா), யோகநாதன் (பங்காளர் நித்தியகல்யாணி ஜுவல்லறி, யாழ்ப்பாணம்), வேலும்மயிலும் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், ஜெயலட்சுமி, இராசலிங்கம் (உரிமையாளர் சிறிமுருகன் ஸ்ரோர்ஸ், நாரம்மல) ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 24-06-89 சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியை சாட்டி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: ந. யோகநாதன். (சி-3002)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone 22389. 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org